பதவிக்காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலமாகும். மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 16–வது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களாகத் தொடரும் வரை அலுவல் வழி உறுப்பினர்களாகப் பதவி வகிப்பர். தேர்ந்தெடுக்கப்பெற விரும்பும் வேட்பாளர்கள் தங்களின் வேட்புத்தாளினை 22–3–2022 பிற்பகல் 3–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத்தாள்கள் அன்றைய தினம் பிற்பகல் 5–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 23–3–2022 பிற்பகல் 3–00 மணிக்குள் தங்களது வேட்புத்தாளினைத் திரும்பப் பெறலாம்.

முற்பகல் 11–00

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அவ்வமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

செல்லத்தக்க வேட்புத்தாள்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், இந்த அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, தேர்தல் நடைபெறும்.

தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2022 மார்ச் 21] [முனைவர் க. பொன்முடி]

"2022 ஆம் ஆண்டு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

6. அரசினர் தனித் தீர்மானம்

காவேரி நதியின் குறுக்கே அணை கட்டுவதற்கு நிதி ஒதுக்கிய கர்நாடக அரசுக்குக் கண்டனம், மேகதாதுவிலோ அல்லது காவேரி படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எந்தவித புதிய நீர்த்தேக்கத் திட்டத்தையும் மேற்கொள்ளக் கூடாது என கர்நாடக அரசை அறிவுறுத்துமாறு ஒன்றிய அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இயக்கத்தின் தலைவரும், தமிழகத்தின் முதல்வருமான தளபதியார் அவர்களுடைய ஆலோசனைப்படியும், அறிவுரைப்படியும் கனத்த இதயத்தோடு, 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்று பாரதி பாடியதைப்போல், 'என்று முடியும் இந்த காவேரி போராட்டம்' என்ற நிலையோடு, ஒரு தீர்மானத்தை*